(இ) இல்லையெனில், இப்பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (a) No.

(b) The work is expected to be completed by 31st August 1972 in the districts of Thanjavur, Tiruchirappalli and Madurai and by 31st December 1972 in the remaining districts.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether it is proposed to issue pass books to all these tenants giving full details of the land held under the tenancy, the amount of lease which is to be collected, the amount of lease paid, etc.?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, டெனன்சி சட்டப்படி யார் யார் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதற்காக மூன்று மாவட்டங்களில் 31—8—1972-க்குள் பூர்த்தி செய்யவேண்டுமென்றும் மற்ற மாவட்டங்களில் 31—12—1972-க்குள் பூர்த்தி செய்யவேண்டுமென்றும் ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த 3 மாவட்டங்களில் எவ்வளவு குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், விவரங்கள் தருகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியாக ரிகார்டுகளைச் சேகரிப்பதன் நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் யார் யார் உண்மையிலேயே குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக இப்போது பதிவு செய்யப்பட்டு வருகிறது. குத்தகைதாரர்களுக்கு சட்டப்படி பாது காப்புத்தர வேண்டும் என்பதற்காகத்தான் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மற்ற ரகசியங்களை இப்போது கேட்க வேண்டாம்.

Salt Board

* 229 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the work done so far by the "Salt Board" set up for the development of Salt based Industry?

1972 ஆகஸ்ட் 23]

உப்புக் குழு.

தவத்திரு குன்றக்குடி அடிகளாார்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

உப்பு தொடர்பான தொழிலை அபிவிருத்தி செய்ய அமைக்கப் பெற்ற உப்புக்குழு (Salt Board) இதுவரையில் ஆற்றிய பணிகளின் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் உப்பு வாரியம் தமிழக அரசால் நிறுவப்பட்டது. இதன் முதல் கூட்டம் 14—7—1971 அன்று நடந்தது. உப்புத் தொழில் சம்பந்தமான ஆலோசகர்களான திரு. குருநாத் அவர்கள், தமிழ் நாட்டில் உப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய சமர்ப்பித்த அறிக்கையை, இந்த கூட்டம் ஆராய்ந்தது. இவ்வறிக்கையை மேலும் விரிவான வகையில் பரிசீலித்து அரசுக்கு ஆக்கபூர்வமான பரிந் துரைகள் வழங்க ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டது. இந்த துணைக் குழு மூன்று முறை கூடி இவ்வறிக்கையை ஆராய்ந்து பல பரிந்துரைகள் வழங்கியுள்ளது. குறிப்பாக தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் பெரிய உப்பளங்கள் துவங்குவதற்கு வகை செய்வதற்கு நான்கு இடங்களைத் தேர்ந்தெடுத்தது.

உப்பு வாரியத்தின் இரண்டாவது கூட்டம் 1972-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடந்தது. இக்கூட்டத்தில், துணைக் குழு வழங்கிய பரிந்துரைகள் ஏற்கப்பட்டன. துணைக் குழுவின் ஆலோசனைப்படி, நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி வைப்பார்—வேம்பார் பகுதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர் பகுதி, செங்கல்பட்டு மாவட்டத்தில் கோவளம் பகுதி ஆகிய நான்கு இடங்களும் பெரிய உப்பளங்கள் அமைக்க ஏற்றவையெனத் தெரிந்தெடுக்கப்பட்டன. இதற்குத் தேவையான அடிப்படை புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒரு திட்டத்தை தயாரித்துக் கொடுக்க ஒரு துணைக் குழு அமைக்கப் பட்டது. மேலும் விரைவாகப் புள்ளி விவரங்கள் சேகரித்துக் கொடுக்க ஒரு உதவி இயக்குநரையும் (Assistant Director) நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட உப்பு வாரியம் உப்பு உற்பத் தியை அதிகரிக்கவும், உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்கவும் அரசுக்கு அவ்வப்போது ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்க வல்ல ஒரு குழுவாகும்.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister, in considering the work done by the Salt Board set up for the development of salt based Industries, also take into consideration that Caustic Soda Industries are doing a great deal for national development and take up with the Central Government, the question of reducing the tariff rates for transport of salt to these industries since the Government are considering the question of reduction in power rates for these industries ?

THE HON. THIRU S. MADHAVAN: That is a separate question. The Government have not considered that aspect.

THIRU G. VASANTHA PAI: The question I have asked is whether they will consider doing something for the development of caustic soda industries. I want to know from the Minister whether they will consider it.

THE HON. THIRU S. MADHAVAN: So far we have not considered that aspect. That was my answer.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, உப்பை மூலப்பொருளாக வைத்து சில தொழில்கள் செய்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படி என்னென்ன தொழில்கள் நடைபெறுகின்றன என்ற விவரங்களை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, காஸ்டிக் சோடாவை வைத்து பல தொழில்கள் செய்கிறார்கள். என்னென்ன தொழில்கள் என்ற விவரங்கள் இல்லை.

THIRU G. VASANTHA PAI: May I bring to the notice of the Government that in Mettur industries had reduction in tariff rates for a long time for railway traffic and now the Central Government are reconsidering the question of imposing the usual tariff rate from station to station, which is harmful to industry. In view of the fact that the Government have recently considered the question of reduction of rates for power given to these industries, may I request in respect of caustic soda industries which are salt based, something should be done for the purpose of developing them by having a dialogue with the Central Government regarding reduction in tariff rates as well as in power rates?

1972 ஆகஸ்ட் 23]

THE HON. THIRU S. MADHAVAN : I have no difference of opinion at all in this respect. Certainly we will take up the question of reduction in tariff with the Government of India, if that aspect is brought to the notice of the Government for its consideration.

THIRU S. NARAYANASWAMY : Are the Government of Tamil Nadu aware that already in respect of salt based chemical industries a great deal of research work has been undertaken and some new products for the first time have been produced in Tamil Nadu in the form of Cromine and other salt based chemicals?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட தொழில்கள் நடந்து வருகின்றன. அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரையே துணைத் தலைவராகப் போட்டிருக்கிறோம். இன்னும் அதிகமாக வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

MR. CHAIRMAN : Questions 230 and 231 are postponed.

Children of Ex-Servicemen

* 232 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of Children of Ex-Servicemen who are being given monetary help by the Government in Thanjavur district; and

(*b*) the amount disbursed during the last three years?

முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் அரசிடமிருந்து பணவுதவி பெறும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் எத்தனை பேர்?

(இ) கடந்த மூன்றாண்டுகளில் அளிக்கப் பெற்ற தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) 1968–69—1,577, 1969–70—1,774, 1970–71—1,493.

(இ) 1968–69—ரூ. 24,022-60.

1969–70—ரூ. 37,885-57.

1970–71—ரூ. 30,387-35.